சிறு கதாமஞ்சரி: மலர்—1.

# மணவாளன்

என்னும்

# பேராசைப் பித்தன்.

லியோ டால்ஸ்டாய

(An adaptation of Tolstoy's 'What shall it profit a man?')

4112

நாகை-சொ. தண்டபாணிப் பிள்ளை
இயற்றியது.

C. S. ஷண்முக முதலியார்,
சரஸ்வதி விலாச புக் டிப்போ,
2/34, நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன், P. O. மதருஸ்.

சென்னை:
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1922.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 3.

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 15, VENKATESA MAISTRY STREET,
SOWCARPET, MADRAS.

# PUBLISHER'S NOTE

THE story told in the following pages is an adaptation of one of Tolstoy's short-stories—'What shall it profit a man ?' The name of the Russian sage carries its own weight with it. Yet we would like to point out here particularly the unanimous verdict of the critics that Tolstoy's genius was singularly visible in his short stories. As a short story writes the sage stands supreme among the artists of the nineteenth century. And none will dispute the fact that to place in the hands of the school going population few other stories are more suited than Tolstoy's

The Tamil garb given to the sage's story is free, simple and suited to the Tamilian taste. We sincerely hope that an attempt of this kind will receive its due encouragement.

4112

# முன்னுரை.

சிறுவர்கள் படிப்பதற்கு ஏற்ற சிறு கதைகள் பல வெளிவரவில்லை யென்பது, கல்வி யதிகாரிகள் நம் தமிழ் மொழிக்குக் கூறும் குறைகளில் ஒன்றாய் உள்ளது. அக்குறையை நீக்கச் சென்ற சில வருஷங்களாகப் பலர் பல சிறு கதைகள் எழுதி வெளியிட்டு வருகின்றனர். ஆயினும் போதுமான அளவு நல்ல கதை நூல்கள் சிறுவர்களுக்கு ஏற்றவாறு வெளி வந்துவிட்டன என்று சொல்வதற்கில்லை. ஆதலின் யாமும் இத்துறையில் எம்மாலான சிறு முயற்சியைச் செய்ய முன்வந்து, 'சிறு கதாமஞ்சரி' என்ற பொதுப் பெயரோடு சில சிறு கதைகள் வெளியிடத் துணிந்தோம். அக்கதைகளுள் இது முதலாவது. எமது முயற்சி இறைவன் திருவருளாலும் தமிழ் மக்களின் அபிமானத்தாலும், கல்வி அதிகாரிகளின் ஆதரவாலும் இனிது நிறைவேறுமென்று எதிர் பார்க்கிறோம்.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

ஓம்.

# மணவாளன்

என்னும்

# பேராசைப் பித்தன்.

4112

## 1-வது அத்தியாயம்.

பட்டணத்தில் வாழ்ந்த ஒருத்தி, நாட்டுப்புறத்தில் வாழ்ந்த தன் தங்கையைப் பார்க்கப் போனாள். தமக்கை ஒரு பெரிய வியாபாரிக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டிருந்தாள். தங்கையோ, உழுது பயிரிட்டு வாழும் ஒரு குடியானவனுக்கு மனைவியாக வாழ்க்கைப் பட்டிருந்தாள். சகோதரிகள் இருவரும் சாப்பிட்டு முடிந்த பிறகு தாழ்வாரத்தில் உட்கார்ந்து தங்கள் குடும்ப நிலைமைகளைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். மூத்த சகோதரி தனது பட்டண வாழ்க்கையைப் பற்றிப் பெருமை பாராட்டிப் பேசினாள். தான் வசிக்கும் அழகிய பெரிய வீட்டைப் பற்றியும், தனக்குள்ள குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகளைப் பற்றியும், தன் குழந்தைகள் உடுத்துக்கொள்ளும் விதம்விதமான உடைகளைப்பற்றியும் அணிந்துகொள்ளும் வகைவகையான நகைகளைப் பற்றியும், தானும் தன் கணவனும் தன் மக்களும் ஆசைதீர உண்ணும் இனிய உணவுகளைப்பற்றியும், தாங்கள் உலாவப் போவதைப் பற்றியும், நாடகம் முதலிய வேடிக்கைகள்

பார்க்கப் போவதைப் பற்றியும், வேறு பலவற்றைப் பற்றியும் அவள் வெகுவாகப் பேசினுள்.

தமக்கை தன் வாழ்வைப்பற்றி அவ்வளவு கர்வமாய்ப் பேசியது தங்கைக்குப் பொறுக்கவில்லை. இவள் தன் கணவன் செய்யும் உழவுத் தொழிலை உயர்த்தியும், தன் தமக்கையின் கணவன் செய்யும் வியாபாரத்தைத் தாழ்த்தியும் பேசத் தொடங்கினுள்:

"என்ன இருந்தாலும் எங்கள் வாழ்க்கை உங்கள் வாழ்க்கையைவிட எவ்வளவோ மேலானது. நாங்கள் நாகரிகமாய் வாழாவிட்டாலும் பயம் இன்னதென்று எங்களுக்குத் தெரியாது. நீங்கள் வியாபாரத்தில் பொருளைச் செலவழித்துப் பொருளை வரப்பற்றவேண்டும். செலவழித்த பொருள் திரும்பி வந்தாலும் வரும்; வராமற் போனுலும் போகும்; ஒரு நிச்சயமில்லை. வியாபாரம் என்றுல் லாபமும் உண்டு; நஷ்டமும் உண்டு. இன்றைக்குப் பணக்காரராய் இருப்பவர்கள் நாளைக்கு ஏழைகளாய் விடக்கூடும். எங்கள் வாழ்வு அவ்வளவு நிலையற்றதாய் இல்லை. குடியானவன் வாழ்வு மிகவும் ஏழ்மையான வாழ்வுதான்; ஆனுல் நீடித்த வாழ்வு. எங்களுக்கு ஏராளமான பொருள் இல்லை; ஆனுல் உள்ள அளவு போதுமானது" என்றுள் தங்கை.

இதைக்கேட்ட தமக்கை, "போதும், அம்மா, போதும். நிறுத்திக்கொள் உன் பெருமையை. ஆடு மாடுகள் கூடத்தான் வயிற்றுக்குப் போதுமான அளவு உண்டு திருப்தியாய் வாழ்கின்றன. நல்ல உடை இல்லை; நல்ல நகை இல்லை; வேடிக்கை விநோதங்கள் இல்லை. என்ன வாழ்க்கையோ உங்கள் வாழ்க்கை! உன் கணவன் மாடு போல் உழைக்கிருன்! நீங்கள் தரித்திரத்தில் உழலுகிறீர்கள். இப்படியே உழைத்து உழன்று சாகப் போகிறீர்

கள். பின்னால் உங்கள் பிள்ளைகள் கதியும் இப்படித்தான் இருக்கப்போகிறது!" என்றாள்.

"நல்ல கதைதான். எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. நாங்கள் நன்றாய்த்தான் வாழ்கிறோம். நாங்கள் ஒருவருக்குக் கைகட்டி உத்தரவு சொல்லவேண்டியதில்லை; ஒருவர் தயவை எதிர் பார்க்கவேண்டிய அவசியமில்லை; ஒருவருக்கு அஞ்சவேண்டியதில்லை. நகரத்தில் உள்ள நீங்களோ அப்படி இருக்க முடியாது. மாயம், வஞ்சனை, மோசங்களுக்கு நடுவே நீங்கள் வாழ்கிறீர்கள்; இன்றைய தினம் எல்லாம் சரியாய் இருக்கலாம்; நாளையதினம் எவனாவது ஒரு வஞ்சகன் வந்து சூதாடவோ, சாராயம் குடிக்கவோ உன் கணவனைத் தூண்டலாம். அவன் மாய வார்த்தைகளில் உன் கணவன் மயங்கிவிட்டால் வந்தது மோசம்! அதோடு உங்கள் வாழ்க்கை அழியும். கிராமத்தில் வசிக்கும் எங்களுக்கு அவ்விதமான தூண்டுதல்களுக்கு இடமில்லை" என்றாள் தங்கை.

அவள் கணவன், **மணவாளன்** என்பவன் அப்பொழுது அவர்கள் பேசிக்கொண்டிருந்த தாழ்வாரத்துக்குப் பக்கத்தில் ஓர் அறையிற் படுத்திருந்தான். சகோதரிகள் இருவரும் அவன் தூங்குகிறான் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் அவன் தூங்கவில்லை. விழித்துக்கொண்டு தான் படுத்திருந்தான். தங்கையும் தமக்கையும் பேசிக்கொண்டிருந்த பேச்சுகள் எல்லாம் அவன் காதில் விழுந்தன.

"அவள் சொல்வது உண்மைதான். நகர வாழ்க்கையைவிட, கிராம வாழ்க்கை மேலானதுதான். இப்பொழுது எனக்குள்ள குறையெல்லாம் அதிக நிலமில்லை என்பதுதான். நான் விரும்பும் அளவு எனக்கு நிலம் மட்டும் இருந்து விடுமானால் ஒருவருக்கும் அஞ்சமாட்

டேன். மனிதருக்கும் அஞ்ச மாட்டேன், தெய்வத்துக்கும் அஞ்சமாட்டேன்" என்று அவன் தனக்குள் எண்ணிக்கொண்டான்.

முதலில் அவனுக்கு இப்படி எண்ணம் உண்டானது. ஆனால் மறு நிமிஷமே அவன் மனசாக்ஷி அவனைக் கண்டித்தது. "மனிதருக்கு அஞ்சாமல் இருக்கலாம். தெய்வத்துக்குக்கூட அஞ்சாமல் இருக்கமுடியுமா?" என்று அவன் மனமே அவனைக் கேட்டது.

ஆனால் அவன் அதை லக்ஷியம் செய்யவில்லை. "தெய்வமாவது, தெய்வத்துக்கு அஞ்சவாவது! தெய்வத்தைக் கண்டவர் யார்? தரித்திரத்தில் துன்பப்படும்போது 'தெய்வம், தெய்வம்' என்று சொல்லித் திருப்தியடைய வேண்டியது தான்; வேறு வகையில்லை. தரித்திரம் நீங்கி விட்டால் தெய்வம் ஏன்? தெய்வத்திற்கு அஞ்சுவது ஏன்?" என்று எண்ணி அவன் தன் மனசாக்ஷியை அடக்கி விட்டான்.

---

## 2-வது அத்தியாயம்.

---

**ம**ணவாளன் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் மணவாளனை விடப் பணக்காரன். அவனுக்கு ஏராளமான நிலம் இருந்தது. அவன் திடீரென்று இறந்துபோய் விட்டான். அவனுக்குப் பிள்ளை இல்லை; தன் மனைவியைத் தவிர வேறு சொந்தக்காரர்களும் இல்லை.

அவன் இறந்தபிறகு அவனுடைய நிலம் முழுவதும் விதவையான அவன் மனைவிக்கே சொந்தமாயிற்று. அவ்வளவு ஏராளமான நிலத்தை வைத்துக்கொண்டு தன்னந்

தனியே அந்தச் சிறு கிராமத்தில் இருப்பதற்கு அவளுக்கு விருப்பம் இல்லை. நிலத்தையெல்லாம் விற்றுவிட்டுப் பட்டணத்தில் உள்ள தன் தாய் தந்தையர் வீட்டுக்குப் போய்விட அவள் உத்தேசித்திருந்தாள்.

அவள் உத்தேசம் கிராமம் முழுவதும் தெரிந்து விட்டது. மணவாளனுக்கும் அது தெரிந்தது. 'நிலம் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டும் என்று நினைத்திருக்கும் நமக்கு இது நல்ல சமயமாயிற்றே. இவ்விதமான சமயம் கிடைப்பது அருமை. கையில் பணம் இருந்தால் அவ்வளவு நிலத்தையும் மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி விடலாம். கிடைக்கக் கூடிய நிலம் இருநூறு ஏகராவுக்கு மேல் இருக்கும். கால் விலைக்குக் கிடைத்தாலும் இரு நூறு ஏகராவில் இருபது ஏகரா வாங்குவதற்குக்கூட என்னிடம் பணம் இல்லை. உள்ள பணத்தையெல்லாம் வாரித் திரட்டினால் பத்து ஏகரா வாங்குவதற்குக் கூடத் தேறாது. என்ன செய்வது!' என்று அவன் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான்.

அப்போது, மற்றொரு குடியானவன் அந்த விதவையின் நிலத்தில் இருபது ஏகரா விலைக்கு வாங்கிவிட்டதாகவும், அதற்குத் தீர்மானமான விலையில் பாதியே அவன் உடனே கொடுத்ததாகவும், மற்றப் பாதியும் ஒரு வருஷ காலத்தில் கொடுத்து விடுவதாக ஒப்பந்தம் எழுதிக் கொடுத்திருப்பதாகவும் மணவாளன் கேள்விப் பட்டான். அதற்குமேல் பொறுத்திருப்பதற்கு அவனால் முடியவில்லை. "நிலம் சகாயமாய்க் கிடைக்கும் என்று தெரிந்த சில நாட்களில் இருபது ஏகரா போய்விட்டது. இன்னும் சில நாட்களில், நான் சற்று ஏமாந்திருந்தால், மிச்சமுள்ள நிலமும் போய்விடும். 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்.' உள்ள பணத்தைக் கொடுத்து,

மிச்சத்துக்குத் தவணை சொல்லி எவ்வளவு நிலம் வாங்கக் கூடுமோ அவ்வளவையும் வாங்கி விடுவதே சரி" என்று தீர்மானித்து அவன் அந்த விதவையிடம் சென்று மிகவும் பக்குவமாக நிலம் கேட்டான்.

நெடுநேரம் இருவரும் பேரம் பேசினார்கள். முடிவில் தீர்மானமான விலையில் கால்பாகம் பெற்றுக்கொண்டு ஐம்பது ஏகரா கொடுப்பதாக விதவை ஒப்புக் கொண்டாள். பாக்கிப் பணத்தை இரண்டு வருஷத் தவணையில் கொடுப்பதாக மணவாளன் ஒப்புக் கொண்டான். பத்திரங்கள் எழுதவேண்டிய முறைப்படி எழுதி முடிந்தன. அன்று முதல் தனக்கு ஏற்கனவே உள்ள சொற்ப நிலத்தை யல்லாமல் மேற்கொண்டு ஐம்பது ஏகரா நிலத்துக்கு மணவாளன் சொந்தக்காரன் ஆனான்.

நிலமும் பொருளும் பாடுபட்டவர்களுக்கே பலன் கொடுக்கும் என்பது மணவாளனுக்கு நன்றாய்த் தெரியும். வாங்கிய நிலத்தை அவன் பாழாக விடவில்லை. அதை உழுது பண்படுத்தி, விதைக்க வேண்டிய காலத்தில் விதைத்து நடவேண்டிய காலத்தில் நட்டு, நீர் பாய்ச்ச வேண்டிய காலத்தில் நீர் பாய்ச்சி வந்தான். அவனுடைய உழைப்பினால் பயிர் நன்றாய்ச் செழித்து வளர்ந்து மிகுந்த பலன் கொடுத்தது.

மணவாளனுக்குச் சொந்தமான நிலம் அவனுடைய முயற்சியினால் அவன் எதிர்பார்த்த அளவுக்கு இரண்டத் தனை பலன் கொடுத்தது. அதனால் இரண்டு வருஷத்தில் செலுத்த வேண்டிய தவணையை அவன் ஒரு வருஷத்திலேயே செலுத்தி விட்டான். மேற்கொண்டு நிலம் வாங்கியதால் அவன் பணக்காரனாய் விடவில்லை. ஆயினும், அவன் தரித்திரம் ஒழிந்தது. இனி எவரும் அவனைத் தரித்திரன் என்று சொல்ல முடியாது. அவன், தரித்திரனு

மல்லாமல், பணக்காரனுமல்லாமல் நடுத்தர நிலைமை யுடையவனானன்.

ஆனால், தரித்திரனா யிருந்தபொழுது மணவாளனுக்கு இருந்த மனத்திருப்தி, தரித்திரம் நீங்கிய இப்பொழுது இல்லை. பணக்காரன் ஆவது எப்பொழுது என்று கவலைப்பட்டான். பேராசை என்னும் பேய் அவனைப் பிடித்துக் கொண்டது.

## 3-வது அத்தியாயம்.

மணவாளனுக்கு ஒரு குறைவும் இல்லை. பத்து ஏகரா நிலத்தை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்துவந்த அவன், இப்பொழுது அறுபது ஏகரா நிலத்துக்குச் சொந்தக்காரனாய் விட்டான். அவனுடைய உழைப்பினால் அந்த அறுபது ஏகரா நிலமும் நூறு ஏகரா அளவு பலன் கொடுத்தது. மணவாளன் தன் நிலத்து விளைவைக் கண்டு மனம் பூரித்தான். ஆனால், அவன் மனப் பூரிப்பைக் கெடுக்க ஒரு சிறு தொல்லை ஏற்பட்டது. சில துஷ்டர்கள் அவன் நிலத்தில் தங்கள் ஆடுமாடுகளை மேயவிட்டுப் பயிர்களை அழித்தும் வேலியைச் சிதைத்தும் மரங்களை வெட்டியும் அவனுக்கு நஷ்டம் உண்டுபண்ணி வந்தார்கள்.

சிறிதுகாலம் மணவாளன் அந்தத் துஷ்டர்களை எச்சரித்து வந்தான். அவர்கள்மீது வழக்குத் தொடுக்க அவனுக்கு இஷ்டமில்லை. ஆனால் அந்தத் துஷ்டர்கள் அவன் எச்சரிக்கையைச் சட்டை பண்ணவில்லை. மேயும் ஆடுமாடுகளைத் துரத்துவதும், சிதைந்த வேலிகளைத் திருத்துவதுமே மணவாளனுக்கு ஓயாத மணியமாய் விட்டது. பொறுக்கும் வரையில்தான் பொறுக்கக் கூடும். அதற்கு

மேல் என்ன செய்வது? எத்தனை நாள் ஓயாத கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் உள்ளாவது? தன் நிலத்தை அந்தத் துஷ்டர்கள் இப்படி நாசப்படுத்துவது, தன்மீது குரோதங் கொண்டல்ல; அலக்ஷியமான குறும்புத் தனத்தாலே தான் என்பது மணவாளன் நன்கறிவான். ஆதலால் தான் அவர்கள்மீது வழக்குத் தொடுக்க மனமின்றி யிருந்தான். ஆனால் அவர்கள் அதை அறிந்து அடங்குகிறவர்களாய்க் காணப்படவில்லை. இன்னும் தாட்சணியம் பார்த்திருந்தால் கஷ்டமும் நஷ்டமும் அதிகமாகுமே யொழியக் குறையா என்று தோன்றியது. 'இனி அலக்ஷியமாய் இருப்பது கூடாது. இவர்களுக்குச் சூடு காட்டி வைக்க வேண்டும். அப்பொழுது தான் இவர்கள் வழிக்கு வருவார்கள்' என்று கருதினான் மணவாளன்.

கருதியபடியே அவன் செய்தும் விட்டான். நியாயஸ்தலத்தில் ஒரு முறை ஒருவனுக்குச் சூடு காட்டினான். இன்னொரு முறை இன்னொருவனுக்குச் சூடு காட்டினான். ஒரு முறை ஒருவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது; இன்னொரு முறை இன்னொருவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இப்படி இரண்டு முறை இரண்டுபேர் மணவாளனால் அபராதம் விதிக்கப்பட்ட படியால், பலரும் அவனுக்கு அஞ்சத் தொடங்கினார்கள்; அவனை வெறுக்கத் தொடங்கினார்கள். அச்சமும் வெறுப்பும் நாளடைவில் பகையாக மாறின. பலர்ப் பகையா யிருந்தது வரவர ஊர்ப் பகையாகி விட்டது. ஊரார் எல்லாரும் மணவாளனை மிகவும் கொடியவனாக மதித்து அவனைத் தம் பகைவனைப் போல் வெறுத்து வந்தார்கள். ஆனால் சில காலம் அவனுடைய நிலம் சேதப்படாமல் இருந்தது. அது அவனுக்குக் கொஞ்சம் ஆறுதலா யிருந்தது.

ஆனுல் அந்த ஆறுதலும் நீடித் திருக்கவில்லை. சில காலம் சென்ற பிறகு, அவ்வூர்த் துஷ்டர்கள் மறுபடியும் அவன் நிலத்தில் குறும்பு செய்யத் தொடங்கினுர்கள். ஒருநாள் விடியற் காலையில் மணவாளன் தன் நிலங்களைப் பார்வையிட வழக்கம்போல் சென்ருன். அப்போது தன் நிலத்து மரங்களில் பத்துப் பன்னிரண்டு வெட்டப்பட்டிருக்கவும், நன்ருய் வளர்ந்து முற்றியிருந்த பயிர்களில் பெரும்பாகம் சின்னுபின்னமாய் அழிக்கப்பட்டிருக்கவும் அவன் கண்டான். அவன் வயிறு எரிந்தது. "எந்தப் படுபாவிகளோ நேற்றிரவு இங்கு வந்து வேண்டுமென்று இவ்வாறு அக்கிரமம் செய்திருக்கிருர்கள். யார் இப்படிச் செய்திருக்கக் கூடும்?" என்று அவன் சிந்தித்தான்.

மணவாளன் நிலத்துக்குப் பக்கத்தில் உள்ள நிலம் சாம்பன் என்னும் ஒரு துஷ்டனுக்குச் சொந்தமாயிருந்தது. "அந்தச் சாம்பன்தான் இப்படிச் செய்திருக்க வேண்டுமென்று மணவாளனுக்குத் தோன்றியது. அவன் சாம்பன் வீட்டுக்குப் போனுன். சாம்பன் வீட்டில் இருந்தான். மணவாளன், அவனைக் கூப்பிட்டு "நீ என் நிலத்தை இப்படி நாசம் செய்தாய்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டான்.

சாம்பன் கோபங்கொண்டு, "உனக்குப் புத்தி சுவாதீனத்தில் இருக்கிறதா இல்லையா? உன் நிலத்தை நான் ஏன் நாசம் செய்கிறேன்? நான் நாசம் செய்ததை நீ பார்த்தாயா?" என்ருன்.

"நீ நாசம் செய்ததில்லை என்று சத்தியம் செய்வாயா?" என்று கேட்டான் மணவாளன்.

"நான்தான் நாசம் செய்தேன் என்று நீ சத்தியம் செய்வாயா?" என்ருன் சாம்பன்.

இப்படியே வார்த்தைகள் வளர்ந்தன. கைகலவாதது ஒன்றுதான் குறை. இருவரும் அவ்வளவு மும்முரமாய்ச் சொற்போர் செய்தார்கள். சாம்பன்தான் நிலத்தை நாசப் படுத்தியவன் என்ற எண்ணம் மணவாளனுக்கு வர வர உறுதிப்பட்டதேயொழியத் தளரவில்லை. நியாயஸ்தலத்துக்குப் போனாலொழிய இவன் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளமாட்டான் என்று கருதி மணவாளன் அவன்மீது நியாயஸ்தலத்தில் வழக்குத் தொடுத்தான். ஆனால் வழக்கில் மணவாளன் வெற்றி பெறவில்லை. தக்க ருசு கிடைக்காமையால் நியாயாதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார்.

மணவாளனுக்குக் கோபம் அதிகமாயிற்று. நியாயாதிபதியை வெறுத்தான்; தான் இருந்த ஊரை வெறுத்தான். "இந்த நியாயாதிபதிகள் நியாயாதிபதிகளா? அநியாய அதிபதிகள்; திருட்டுப் பையல்கள். அதனால் தான் அநியாயம் செய்பவர்களையும் திருட்டுப் பையல்களையும் தண்டிக்காமல் விட்டுவிடுகிறார்கள்; போக்கிரிகளும் திருடர்களும் வசிக்கும் இந்தப் பாழும் ஊரில் நிலம் வாங்கினேனே, என்னைப்போல் மூடனுண்டா!" என்று அவன் கண்டவர்களிடமெல்லாம் தன் எரிச்சலை வெளியிட்டுப் பிதற்றினான். அதனால் ஊராரே அவனை இகழ்ந்து வெறுக்கத் தொடங்கினார்கள். சிலர் அவனை அடித்து ஊரைவிட்டுத் துரத்திவிடலாம் என்று கூடப் பேசிக் கொண்டார்கள்.

இப்படி இருக்கையில், அவ்வூர் ஜனங்கள் வெளியூர்களிற் போய்க் குடியேற உத்தேசித்திருப்பதாக ஒரு வதந்தி பிறந்தது. அது மணவாளன் காதுக்கு எட்டிய போது அவன் சிந்திக்கலானான்: "ஊரார் எல்லாரும் போனாற் போகட்டும். நான் ஏன் போகவேண்டும்? இந்தத் துஷ்டர்கள் ஊரைவிட்டு ஒழிந்தால் நல்லதுதான்;

நம்மைப் பிடித்த சனி விட்டாற்போ லிருக்கும். அது மட்டுமா? அவர்கள் நிலத்தையும் நான் அனுபவிக்கலாம். இவ்வூரில் நானே ராஜாவாய் வாழலாம்.''

இப்படி அவன் எண்ணமிட்டுக்கொண் டிருந்த நாட்களில் ஒருநாள், அயலூரான் ஒருவன் அவன் வீட்டுக்கு வந்து தங்குவதற்குக் கொஞ்சம் இடம் கேட்டான். 'நல்லது' என்று மணவாளன் அவனுக்கு இடமும் கொடுத்து, வந்த களை நீங்க உணவு கொடுத்து உண்ணவும் சொன்னான். அயலூரான் உண்ட பிறகு, மணவாளனும் அவனும் உலக விஷயங்களைப்பற்றி உரையாடத் தொடங்கினார்கள்.

"நீர் எங்கிருந்து வருகிறீர்?'' என்று கேட்டான் மணவாளன்.

அதற்கு அந்த வழிப்போக்கன், "நான் வடக்கே தெலுங்கு நாட்டிலிருந்து வருகிறேன். நம் நாட்டவர் அநேகர் அங்கே போய்க் குடியேறி யிருக்கிறார்கள். அங்கே நிலம் எவ்வளவு வளமாய் இருக்கிறது தெரியுமா? நல்ல நீர்ப் பாய்ச்சல். தண்ணீர் இறைக்கவேண்டியது அவசியமே யில்லை. விதையைத் தெளித்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட வேண்டியதுதான். அப்புறம் நிலத்தைத் திரும்பிப் பார்க்கவேண்டியது அவசியமே இல்லை. அறுப்புக் காலத்தில் போய்ப் பார்த்தால், கதிர்கள் ஓராள் உயரத்துக்கு வளர்ந்து முற்றிச் சாய்ந்து கிடக்கும். கதிருக்கு ஒரு படி நெல் தேறும். ஆஹா! அவ்வளவு செழுமையான நிலம் வேறெங்கும் இராது. விலையோ மிகவும் சரசம். இங்கே ஒரு ஏகரா வாங்குகிற விலைக்கு அங்கே எட்டு ஏகரா வாங்கலாம். இந்தப் பக்கத்திலிருந்து வந்த ஒரு குடியானவன்—மிகவும் ஏழை—அங்கே நிலம் வாங்

கிக்கொண்டு ஒரு பெரிய மிராசுதாரனாய் இருக்கிறான்" என்றான்.

மணவாளனுக்கு, அதைக் கேட்கக் கேட்க, நாவில் நீர் ஊறியது. அவன் நெஞ்சம் துடித்தது. "நாம் ஏன் இந்தப் பாழும் கிராமத்தில் இருக்கவேண்டும்? ஒன்றுமில்லாத ஏழைக் குடியானவன் ஒருவன் அங்கே போய்ப் பெரிய மிராசுதாரனாய் விட்டான் என்றால், நாம் போனால் ஏராள மான நிலம் வாங்கிக்கொண்டு ஒரு ஜமீன்தாரர் போல் வாழலாமே! இருக்கட்டும், என் நிலத்தை யெல்லாம் விற்றுவிட்டு அந்தத் தெலுங்கு நாட்டுக்கே போய்விடு கிறேன். அதுவரையில் விஷயத்தை ஒருவருக்கும் வெளி விடாமல் இரகசியமாய் வைத்திருக்கவேண்டும்" என்று அவன் தனக்குள் எண்ணமிட்டுக்கொண் டிருந்தான்.

வந்த அயலூரான் அன்றையதினம் அவன் வீட்டில் தங்கியிருந்து மறுநாள் எழுந்து போய்விட்டான்.

அந்த வழிப்போக்கன் சொன்னது உண்மையா யிருக்குமா என்ற சந்தேகம் மணவாளனுக்கு இருந்தது. உள்ள நிலத்தை விற்றுவிட்டு, வழிப்போக்கன் பேச்சை நம்பி வட நாட்டுக்குப்போய் அங்கே அவன் சொன்னபடி ஒன்று மில்லாவிட்டால் என்ன செய்கிறது? பலாப்பழத் துக்கு ஆசைப்பட்டுக் கையில் இருந்த கிளாப்பழத்தை யும் இழந்த கதையாய் முடியும், அன்றோ? ஆகையால் அவன், தானே நேரில் வடநாட்டுக்குப் போய், வழிப் போக்கன் சொன்ன விஷயங்கள் எவ்வளவுதூரம் உண்மை என்று அறிந்துகொண்டு பிறகே எந்தக் காரியமும் செய்வதென்று தீர்மானித்தான். அப்படியே, பிரயாணத் துக்கு வேண்டிய யாவும் சித்தம் செய்துகொண்டு, வட நாட்டுக்குச் சென்றான்.

வழிப்போக்கன் சொல்லிய விஷயங்களில் ஒன்றும் தவறில்லை. அவன் குறித்த இடத்தில் நிலங்கள் எல்லாம் மிகவும் வளமுடையவைகளாகவே காணப்பட்டன. பயிர்கள் அவன் சொன்னதுபோலவே ஓராள் உயரத்துக்கு, வளர்ந்து செழுமையாயிருந்தன. விலை விஷயம் எப்படியிருக்கிறதென்று அறிய மணவாளன் அவ்விடத்திற் சிலரை விசாரித்தான். விலை மிகவும் சொற்பமென்றே தெரிந்தது. வழிப்போக்கன் சொன்னபடி, தென்னாட்டில் ஒரு ஏகரா வாங்கும் தொகைக்கு அங்கே எட்டு ஏகரா வாங்கலாமென்று தெரிந்தது. அந்த விலைக்கும் வாங்குவாரில்லாமல் ஏராளமான நிலம் பாழாய்க் கிடந்தது.

மணவாளன் தான் செய்த விசாரணையில் திருப்தியுற்றுத் திரும்பி வந்துவிட்டான். வந்த மறுநாளே தன் நிலம் முதலியவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் விற்கத் தொடங்கினான். அதிலும் லாபத்துக்கே விற்றான். ஆறு மாத காலத்தில் அனைத்தையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு, அவன் தன் குடும்பத்தோடு புறப்பட்டு வடநாட்டுக்குச் சென்றான்.

---

## 4-வது அத்தியாயம்

---

**ம**ணவாளன் தெலுங்கு நாட்டில்வந்து குடியேறினான்.

தன் அறுபது ஏகரா நிலத்தையும், வீடு வாசல்களையும், கன்று காலிகளையும், வேறு பலவகையான உடைமைகளையும் விற்றுக் கொண்டுவந்த பணம் அவன் கையில் ரொக்கமாக இருந்தது. அதைக்கொண்டு அவன் தான் குடியேறிய ஊரில், ஒரு வீடும், நானூறு ஏகரா நிலமும், அதைச் சாகுபடி செய்ய அவசியமான ஏர் கலப்பை முத

லானவைகளும், மாடு கன்றுகளும் வாங்கிக்கொண்டான். இப்பொழுது மணவாளனுக்குத் தன் சொந்த நாட்டில் இருந்ததைவிடச் சற்றேறக்குறைய ஏழு மடங்கு சொத்து இருந்தது. தான் எண்ணி வந்ததுபோலவே அவன் இப்பொழுது ஒரு ஜமீன்தார்போல் ஆய்விட்டான். பண்ணையாட்கள் பலர் அவன் இட்ட வேலையைச் செய்யக் கை கட்டிக் காத்திருந்தார்கள். எல்லாம் அவன் மனம் போலவே அமைந்துவிட்டன. அவன் தன் அதிர்ஷ்டத்தை எண்ணி மனம் பூரித்திருந்தான்.

வரவர அவன் கொண்டிருந்த பூரிப்புக் குறையத் தொடங்கியது. புதிதாய்க் குடியேறிய இடத்தில் முதலில் சௌகரியங்கள் மட்டுமே தோன்றின. நாளேற நாளேற அந்தச் சௌகரியங்கள் ஒவ்வொன்றாய் மறைந்தன; அசௌகரியங்கள் ஒவ்வொன்றாய்த் தோன்றின. முதலாவது அசௌகரியம் அவன் நிலம் எல்லாம் ஓர் இடத்தில் சேர்ந்தாற்போல் இல்லை; இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாய் வெகுதூரம் சிதறிக் கிடந்தது. இரண்டாவது, நிலத்திற் பெரும்பாகம் நாகதாளி முதலிய களைகள் நிறைந்து பாழ்பட்டுக் கிடந்தது. மூன்றாவது, வீட்டுக்கும் அவன் நிலத்துக்கும் வெகுதூரம் இருந்தது. இப்படியே இன்னும் பல அசௌகரியங்கள் ஒவ்வொன்றாய் முளைத்தன. அந்நாட்டில் உள்ள மிராசுதாரர்கள் தங்கள் நிலத்திலேயே அழகிய வீடு கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நிலமும் வீட்டுக்கருகாகச் சேர்ந்தாற்போல் இருந்தது. நிலத்திற் களைகளும் மிகுதியாக வளர்ந்தில்லை.

'அப்படி வாய்க்கவில்லையே நமக்கு' என்று மணவாளன் எண்ணி வருந்தினான். அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தான் வாங்கிய நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிட்டால், தனக்குத் தொல்லை இராது

என்று நினைத்தான். அப்படியே கூடிய வரையில் நல்ல லாபத்துக்குக் குத்தகை பேசிப் பல குடியானவர்களிடம் தன் நிலங்களைப் பகுத்து ஒப்படைத்து விட்டான். அவன் நினைத்தபடியே, அப்படிச் செய்ததால் அவனுக்கு நிலங்களை மேற்பார்த்துக் களை நீக்கிச் சாகுபடி செய்யவேண்டிய தொல்லை ஒழிந்தது. ஆனால் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை வசூல் செய்வது மிகவும் கஷ்டமா யிருந்தது. ஆயினும் குற்றமில்லை என்று அவன் மூன்று வருஷகாலம் தன் நிலங்களைக் குத்தகைக்கே விட்டு வந்தான்.

வருஷத்துக்கு வருஷம் குத்தகைதாரர்களுடைய தொல்லை அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. இதற்கு என்ன செய்வதென்று மணவாளன் யோசித்துக்கொண்டிருக்கையில், வழிப்போக்கனை ஒரு வியாபாரி அவன் வீட்டுக்கு வந்தான். மணவாளன், தன் குறைகளை அவ்னிடம் சொல்லி வருத்தப்பட்டான். தென்னாட்டில் தனக்கிருந்த நிலத்தையெல்லாம் விற்றுவிட்டு, நிலம் மலிவாய்க் கிடைக்கிறது என்று அங்கு வந்து நிலம் வாங்கிக் கொண்டு குடியேறிய விவரத்தையெல்லாம் அவன் அந்த வியாபாரிக்குச் சொன்னான்.

அவன் கூடியவற்றையெல்லாம் கேட்டுக்கொண்ட பிறகு அந்த வியாபாரி அவனை நோக்கி, "இந்த நாட்டில் நிலம் மலிவாயிருப்பது உண்மைதான். ஆனால் நீர் இன்னும் கொஞ்சம் வடக்கே போய்க் குடியேறி யிருந்தால் இவ்விதமான தொல்லைகள் ஒன்றும் இராது. நிலம் இன்னும் கூட மலிவாய்க் கிடைத்திருக்கும்" என்றான்.

"அப்படியா!" என்றான் மணவாளன்.

"ஆமாம். இங்கும் நிலம் மலிவானாலும் குடியானவர்கள் கொஞ்சம் நாகரிகம் உடையவர்கள். ஆதால் வம்பு

வழக்குகளுக்குப் பின் வாங்கமாட்டார்கள். வடக்கே போகப் போக இவ்வளவு நாகரிகம்கூட இல்லை. ஜனங்களெல்லாம் சுத்த மூடர்கள்; பைத்தியக்காரர்கள். நிலத்தை அளக்கக்கூட அவர்களுக்குத் தெரியாது. நான் அப்படித்தான் அங்கே ஆயிரம் ஏகரா நிலம் வாங்கியிருக்கிறேன். ஆயிரம் ஏகராவும் சேர்ந்தாற்போல் இருக்கிறது. நல்ல நீர்ப்பாய்ச்சலுள்ள இடம்.'' என்றான் வியாபாரி.

மணவாளனுக்கு மனம் துடித்தது. "எப்படி வாங்கினீர்? இங்கே வாங்கிய நிலத்தை விற்றுவிட்டால் இதில் வரும் தொகையைக்கொண்டு அங்கே நான் ஆயிரம் ஏகரா வாங்கலாமா? எப்படி வாங்குகிறது? அந்த வழியைக் கொஞ்சம் சொல்லும்'' என்று கேட்டான்.

"அப்படிச் செய்தீரானால் மிகவும் நல்லதுதான். வேண்டுமானால் அவ்விடத்துக்கு நான் உம்மை யழைத்துக் கொண்டு போகிறேன். அங்கே ஊர்த் தலைவன் என்று ஒரு கிழவன் இருப்பான். அவனுக்கு இரண்டு சட்டைகள், பலகார பக்ஷணங்கள் இவைகளைக் காணிக்கையாகக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். அவர்களுக்குச் சட்டை தைக்கவும் தெரியாது; பலகார பக்ஷணங்கள் செய்யவும் தெரியாது. ஆகையால் இவைகளைக் கண்டதும் காணாது கண்டவர்கள்போல் மனங்களித்து நீர் கேட்டபடி எதுவும் செய்வார்கள். உம் இஷ்டம் போல் நல்ல இடத்தில் நல்ல நிலமாய்ச் சேர்ந்தாற்போல் உள்ளதாய்ப் பார்த்து மிகவும் சொற்பத் தொகைக்கு எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்'' என்றான் வியாபாரி.

மணவாளன் யோசித்தான்: 'ஊரைவிட்டு வந்தது வந்தோம். இன்னும் கொஞ்சம் வடக்கே போய்க் குடியேறுவதற்குப் பின் வாங்குவானேன். இந்தக் குத்தகை

தாரர்களோடு இந்த மூன்று வருஷ காலமாய்ப்பட்ட துன்பம் போதும். நம்முடைய அதிர்ஷ்டந்தான் இந்த வியாபாரியை இங்கே கொண்டு வந்துவிட்டது. இவர் பேச்சைக்கேட்டு வடக்கே போய் நிலம் வாங்கிக் குடியேறி விடுவதே உத்தமம்' என்று தீர்மானித்தான்.

## 5-வது அத்தியாயம்.

**மணவாளன்** வியாபாரி சொன்ன இடத்துக்குப் போகும் வழி முதலான விவரங்களை யெல்லாம் கேட்டு அறிந்துகொண்டு அவனை அனுப்பிவிட்டான். மறு நாளே தன் மனைவியிடம் சங்கதியைத் தெரிவித்து, செலவைப் பொருட் படுத்தாமல் எத்தனை விதமான பலகாரங்கள் அவளுக்குச் செய்யத் தெரியுமோ அத்தனை விதமான பலகாரங்களும் செய்யச் சொன்னான். அதற்கு வேண்டிய சாமான்களையும் நிறைய வாங்கிவந்து கொடுத்தான். "புது மருமகப் பிள்ளைக்குக் 'கட்டுப்பெட்டி'ப் பலகாரம் செய்ய வேண்டியிருந்தால் எவ்வளவு அருமையாய்ச் செய்வாயோ அவ்வளவு அருமையாய்ச் செய்யவேண்டும்" என்றும் அவன் தன் மனைவிக்குச் சொல்லி யிருந்தான்.

அவன் மனைவியும் அவன் விரும்பியபடியே பண்டங்கள் செலவாவதையும் பாராது, தன்னுடைய தேகசிரமத்தையும் பாராது தனக்குத் தெரிந்த பலகார வகைகளை யெல்லாம் செய்தாள். பலகாரங்கள் செய்து முடிவதற்கே நான்கு நாட்கள் ஆயின. செய்த பலகாரங்கள் நான்கு கூடைகள் நிரம்பிவிட்டன. மணவாளன் அவைகளைக் கண்டு மிகவும் சந்தோஷமுற்றான். மறுநாளே அவன் பிரயாணம் தொடங்கிவிட்டான். தன்னிடத்திலிருந்த

நல்ல சட்டைகளில் மூன்று பொறுக்கி எடுத்துக்கொண்டான். தன்னுடைய வேலைக்காரன் ஒருவனைத் துணையாக அழைத்துக்கொண்டான். இவைகளோடு தன் கையில் ரொக்கமாக இருந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு ஒற்றைமாட்டு வண்டி ஒன்றில் ஏறிச்சென்றான்.

வியாபாரி சொன்ன இடத்திற்குப் போய்ச்சேர மூன்று நாட்கள் ஆயின. நான்காம் நாள் காலையில் மணவாளன் குறித்த ஊர் போய்ச் சேர்ந்தான். வியாபாரி சொன்ன அடையாளங்கள் எல்லாம் சரியாயிருந்தன. வண்டியை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு, ஊருள்போய் ஊர்த்தலைவனைத் தேடிக் கண்டு பிடிக்கலாம் என்று மணவாளன் வண்டியைவிட்டுக் கீழிறங்கினான். அப்பொழுது அவ்வழியாய்ப் போன அவ்வூரான் ஒருவன், மணவாளன் அயலூரானாய் இருப்பதுகண்டு அவனை நெருங்கி விசாரித்தான். மணவாளனுக்குத் தெலுங்கு பாஷை கொஞ்சம் தெரியும். ஆனாலும், அவ்வூரான் பேசிய தெலுங்கு அவனுக்கு விளங்கவில்லை. மணவாளன் தனக்குத் தெரிந்த தெலுங்கில் என்னவோ சொன்னான். மற்றவனுக்கு அது விளங்கவில்லை. அதன்மேல் மணவாளன் தான் தெற்கேயிருந்து வந்ததாகச் சைகை செய்தான். ‘என்ன காரியமாய் வந்தாய்’ என்று மற்றவன் சைகையாலேயே கேட்டான். தான் வந்த காரியத்தை அவனுக்குத் தெரிவிக்க மணவாளன் என்னென்னவோ சைகைகள் செய்தான்.

இப்படி இவர்கள் ஊமையர்கள்போல ஒருவருக்கொருவர் சைகைசெய்து பேசிக்கொண்டிருக்கையில் வேறு சிலர் அவ்வழியாய் வந்தார்கள். அவர்களும் அவ்வூரார்களே. தம் ஊரான் ஒருவன் அயலூரான் ஒருவனுடன் சைகை செய்து பேசிக்கொண்டிருப்பதையும், வண்டி ஒன்று பக்கத்தில் நிற்பதையும் கண்டு அவர்களும் அங்கே

கின்ருர்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் பின்னும் சிலர் அங்கே வந்து கூடினர். இப்படியாகக் கூட்டம் அதிகரித்தது. முதல் வந்தவனைப் போலத்தான் பிறகு வந்தவர்களும் பேசினுர்கள். ஆகையால் ஒருவர் பேச்சும் மணவாளனுக்கு விளங்கவில்லை. அவனேடு பேச விரும்பிய பலரும் சைகைகாட்டியே பேச வேண்டியவர்களானுர்கள்.

அந்தக் கூட்டத்தில் தமிழ் தெரிந்த தெலுங்கன் ஒருவன் இருந்தான். புதிதாய்த் தம் ஊருக்கு வந்தவன் தமிழனே என்பது அவனுக்குத் தெரிந்தது. உடனே அவன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு மணவாளனிடம் வந்து "ஐயா நீர் யார்?" என்று கேட்டான். அப்போது மணவாளனுக்கு உண்டான ஆனந்தம் சொல்லிமுடியாது. 'தமிழ் தெரிந்த தெலுங்கன் ஒருவன் அகப்பட்டானே! இதுவும் நம்முடைய அதிர்ஷ்டந்தான்' என்று எண்ணிக்கொண்டு அவன் சந்தோஷித்தான்; 'அவனையே துவிபாஷியாக வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணித் திருப்தியுற்று, அவனை நோக்கி, "நான் தெற்கேயிருந்து வந்தேன். இங்கே நிலம் வாங்க வேண்டுமென்று வந்திருக்கிறேன்" என்ருன்.

துவிபாஷி அவன் கருத்தை அங்கு நின்ற மற்றவர்களுக்குச் சொன்னுன். உடனே எல்லாரும் முகமலர்ந்து, அவனை வரவேற்ருர்கள். தான் அங்கே நிலம் வாங்கப் போவதைக்கேட்டு அவர்கள் சந்தோஷித்துத் தன்னை உபசரிப்பதை அவன் அறிந்துகொண்டான். உடனே அவன், வண்டியிலிருந்த பலகாரக்கூடைகளில் ஒரு கூடையை வெளியில் எடுத்து, அதிலிருந்த பலகாரங்களை அங்கிருந்தவர்கள் எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். பலகாரத்தை வாங்கித் தின்றதும் அந்தப் பேதை ஜனங்களுக்கு மணவாளன்மீது மிகுந்த பிரியம் உண்டாய்

விட்டது. அவனைப் பலபடியாகப் புகழ்ந்தார்கள்; உப சரித்தார்கள். அவனைப் பற்றியும் அவன் கொடுத்த பல காரங்களைப் பற்றியும் மிக உயர்வாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். நெடுநேரம் வரையில் அவர்கள் பேச்சு ஓயவில்லை.

கடைசியாகத் துவிபாஷி அவர்களைக் கையமர்த்தி விட்டு மணவாளனை நோக்கி, "நாங்கள் பேசிக்கொண்ட தெல்லாம் உமக்கு விளங்கியதா?" என்று கேட்டான்.

"நன்றாய் விளங்கவில்லை" என்றான் மணவாளன்.

"உம்மிடத்தில் எங்கள் எல்லாருக்கும் மிகுந்த பிரியம் உண்டாய்விட்டது. உம்மை எங்கள் விருந்தினராக நாங்கள் கொண்டுவிட்டோம். நீர் பிரியமுடன் எங்களுக் குப் பலகாரம் கொடுத்தீர். ஆகையால் உமக்குப் பிரிய மானதை நாங்களும் பிரியமுடன் உமக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களிடம் உள்ளவற்றில் உமக்குப் பிரியமானதென்ன? சொல்லும். அதைத் தர நாங்கள் தயாராயிருக்கிறோம்" என்றான் துவிபாஷி.

உடனே மணவாளன் இதுதான் சமயமென்று அந் தத் துவிபாஷியை நோக்கி, "உங்கள் ஊரில் நிலம் வாங் கிக்கொண்டு உங்கள் ஊரிலேயே வசிக்கவேண்டும் என்ற ஒரு பிரியந்தான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எங்கள் ஊரில் அதிக நிலமில்லை. உள்ள நிலமும் நல்ல நிலமல்ல. உங்கள் ஊரிலோ நிலமும் அபரிமிதமாய் இருக்கிறது; நல்ல நிலமாகவும் இருக்கிறது. இவ்வளவு வளமையான நிலத்தை நான் வேறெங்கும் பார்த்ததில்லை" என்றான்.

அவன் சொன்னதைத் துவிபாஷி மற்றவர்களுக்கு மொழிபெயர்த்துச் சொன்னான். அதன்மேல் அவர்கள் தங்களுக்குள் என்னவோ பேசிக்கொண்டார்கள். அவர் கள் பேசியது இன்னதென்று மணவாளனுக்கு விளங்க

வில்லை. ஆனால், தனக்குச் சாதகமாகவும், தன்மேற் பிரியமாகவுந்தான் பேசுகிறார்கள் என்பது மட்டும் அவர்கள் முகக்குறிப்பால் விளங்கியது. அவர்கள் இரகசியமாக எதுவும் பேசவில்லை. சிரித்து மகிழ்ந்து வாய்விட்டு வெளிப்படையாகவே பேசினார்கள். சுமார் கால்மணி நேரம் சென்றபிறகு அவர்கள் பேச்சு ஓய்ந்தது. எல்லோரும் மணவாளன் முகத்தைப் பார்த்தார்கள்.

அப்போது துவிபாஷி அவனை நோக்கி, "ஐயா, உம்முடைய நல்ல குணத்துக்காக உமக்குத் தேவையான நிலத்தைக் கொடுக்க எல்லாரும் சித்தமாயிருக்கிறார்கள். உமக்குத் தேவை இவ்வளவு என்று சொல்லும்" என்றான்.

மறுபடியும் அவர்களுக்குள் பேச்சு ஆரம்பித்தது. சிலர் கோபமாக ஒருவரோடு ஒருவர் வாதாடினார்கள். "அவர்கள் வாதாடுவது எதைப்பற்றி?" என்று மணவாளன் துவிபாஷியைக் கேட்டான். அதற்கு அந்தத் துவிபாஷி "சிலர் ஊர்த்தலைவன் உத்தரவில்லாமல் நிலம் கொடுக்க முடியாது; அவன் சம்மதத்தைக் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்கிறார்கள். வேறு சிலர் அது அவசியமில்லை. ஊர்த்தலைவன் உத்தரவு இதற்கு ஏன்? அவன் சம்மதத்தைக் கேளாமலே கொடுத்துவிடலாம் என்கிறார்கள். இதுதான் அவர்கள் வாக்குவாதம்" என்றான்.

## 6-வது அத்தியாயம்.

**வாக்கு வாதம்** வளர்ந்தது. அது எப்படி முடிகிறது பார்ப்போம் என்று மணவாளன் மௌனமாயிருந்தான். அப்பொழுது புதிதாய் ஒரு மனி

தன் அங்கே வந்தான். அங்கிருந்தவர்கள் எல்லாரையும் விட அவன் வயது முதிர்ந்தவனாகக் காணப்பட்டான். தலையில் ஒரு பெரிய தலைப்பாகையும், உடம்பில் கோணி போல் அழுத்தமான ஒரு போர்வையும், இடுப்பிலிருந்து முழங்கால் வரையில் ஒரு முரட்டு வேஷ்டியும் அவன் தரித்திருந்தான்.

அவன் வந்ததும் சச்சரவெல்லாம் அடங்கி விட்டது. துவிபாஷி அவனைச் சுட்டிக் காட்டி "இவர் தான் ஊர்த் தலைவர்" என்றான். உடனே மணவாளன் அவனுக்கு வந்தனம் செய்து, வண்டியிலிருந்து இரண்டு பலகாரக் கூடைகளையும் இரண்டு சட்டைகளையும் அவனுக்குக் கையுறையாகக் கொண்டுவந்து கொடுத்தான்.

ஊர்த் தலைவன் அவைகளைச் சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டு மணவாளனை உட்காரச் சொல்லித் தானும் அங்கேயே தரையில் உட்கார்ந்தான். மணவாளனும் உட்கார்ந்தான். மற்றவர்களும் உட்கார்ந்தார்கள். ஊரார் பலரும் மணவாளன் வந்த காரியத்தைத் தம் தலைவனுக்குச் சொன்னார்கள். தலைவன் அவர்கள் சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டு, எல்லோரையும் பேசாம லிருக்கும்படி கை யமர்த்திவிட்டு மணவாளனை நோக்கி, "நல்லது, ஐயா. உமது விருப்பப்படியே நிலம் தருகிறோம். உமக்கு வேண்டுமளவு நிலத்தை வேண்டுமான பொழுது ஆண்டு கொள்ளலாம்" என்றான்.

"மிகவும் சந்தோஷம். உங்கள் ஊரில் ஏராளமான நிலம் இருப்பதாகத் தெரிகிறது. அவ்வளவும் எனக்கு வேண்டாம். எவ்வளவு நிலம் விலைக்குக் கொடுக்கக்கூடும் என்பதை மட்டும் சொல்லி விடுங்கள். எனக்குப் பிரியமான நிலத்தை நான் விலைக்கே வாங்கி எனக்கு உரிமையாக்கிக்கொள்ள விரும்புகிறேன். விலை தீர்மானமானதும்

அதைப் பெற்றுக்கொண்டு நிலத்தை அளந்து சர்வே நம்பர் குறித்து விக்கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட வேண்டும். ஏனென்றால் எதுவும் எழுத்து மூலமாய் இருந்து விடுவது நல்லது. நீங்கள் நல்லவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த நிலத்தை இல்லையென்று சொல்லப் போகிறதில்லை. நமக்குள் வழக்கு ஏற்படாது. ஆனால், உங்களுக்குப் பின்னால் உங்கள் சந்ததியார்களும் உங்களைப் போலவே இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? ஆகையால் எதுவும் எழுத்து மூலமாய் இருந்து விடுவது நல்லது " என்றான் மணவாளன்.

அவன் கருத்தை நன்றாய் அறிந்துகொண்ட ஊர்த் தலைவன் "நீர் சொல்வது நியாயந்தான். உம்முடைய விருப்பப்படி நிலத்தை அளந்தானதும் விக்கிரயப் பத்திரம் உம்முடைய பேருக்கு எழுதி சாக்ஷி குறித்துக் கையெழுத்திட்டுத் தருகிறோம். அதைப்பற்றி உமக்குக் கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம். உமக்கு வேண்டிய நிலம் எவ்வளவு? சொல்லும் " என்றான்.

"இவ்வளவு நிலம் இன்ன விலை என்பது சொன்னீர்களானால், அதற்குமேல் நான் எனக்குத் தேவையான நிலம் இவ்வளவு என்று சொல்கிறேன் " என்றான் மணவாளன்.

"சாதாரணமாய் நாங்கள் ஒரு 'தினுசு' நிலம் ஆயிரம் வராகனுக்கு விற்பது வழக்கம். உமக்கு அதே நிலத்தை மிகவும் சொற்ப விலைக்குத் தருகிறோம். 'தினுசு' நிலம் முந்நூறு வராகன் வீதம் நீர் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளும்" என்றான் ஊர்த் தலைவன்.

'தினுசு' நிலம் என்றால் எவ்வளவென்று மணவாளனுக்கு விளங்கவில்லை. அதை விளக்கிச் சொல்லும்படி அவன் ஊர்த் தலைவனைக் கேட்டான். அதற்கு அவ்வூர்த்

தலைவன் "நாங்கள் நிலத்தை அளக்கும் வழக்கம் இல்லை. நீர் ஒரு நாளைக்குள்—அதாவது சூரியன் உதிக்கும் பொழுது தொடங்கிச் சூரியன் அஸ்தமிப்பதற்குள்—எவ்வளவு நிலத்தின் எல்லையைச்சுற்றி வரக்கூடுமோ அவ்வளவு நிலந்தான் ஒரு 'தினுறு' நிலம். அந்த அளவுள்ள நிலத்தைத்தான் முந்நூறு வராகனுக்கு உமக்கு விற்று விடுகிறதாகச் சொன்னேன்" என்றான் ஊர்த் தலைவன்.

மணவாளனுக்கு அது ஆச்சரியமாயிருந்தது. அவன் ஊர்த் தலைவனை நோக்கி, "ஐயா, நன்றாய் யோசித்துச் சொல்லும். ஒரு பகலுக்குள் நான் சுற்றி வரக்கூடிய நிலம் மிகவும் அதிகமா யிருக்குமே. நாழிக்கு ஒரு மைல் நடந்தால்கூட முப்பது மைல் சுற்றளவுள்ள நிலத்தைச் சுற்றி வரக்கூடுமே!" என்றான்.

அதைக் கேட்டு ஊர்த் தலைவன் நகைத்து, "முப்பது மைலல்ல; அறுபது மைல் சுற்றளவுள்ள நிலத்தைச்சுற்றி வரக்கூடுமானாலும் சுற்றி வாரும். நீர் சுற்றிவரும் நிலம் முழுவதும் உம்முடையதே. ஆனால் ஒரு நிபந்தனை" என்றான்.

"அது என்ன நிபந்தனை?" என்று கேட்டான் மணவாளன்.

"சூரியன் அஸ்தமிப்பதற்குள் நீர் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேரவேண்டும். அப்படி வரத் தவறினால் உம்முடைய முந்நூறு வராகனும் எங்களுக்கு உரியதாய் விடும். நிலம் உமக்கு உரிமை யாகாது" என்றான் ஊர்த் தலைவன்.

மணவாளன் சிறிது யோசித்தான்; பிறகு, "நல்லது, நான் சுற்றிவரும் எல்லைக்கு அடையாளம் இடுவது எப்படி?" என்று கேட்டான்.

"கையில் ஒரு சிறு கடப்பாரை எடுத்துக் கொண்டு போய்க் கொஞ்ச தூரத்துக்கொருதரம் ஒரு சிறு குழி தோண்டிக்கொண்டு போம். பிறகு, மறுநாள் நாம் சாவகாசமாய் அந்தக் குழிகளைத் தொடர்ந்து எல்லை அறுத்துக் கொண்டு வந்துவிடலாம். இப்படித்தான் நாங்கள் செய்கள் செய்வது வழக்கம். வேறு வகையாய் நீர் அடையாளம் குறிக்கக் கூடுமானுல் அப்படியே செய்யும். அடையாளம் தெளிவா யிருக்க வேண்டியது. அவ்வளவு தான்" என்ருன் ஊர்த் தலைவன்.

அவன் சொல்லிய உபாயமே நல்லதாக மணவாளனுக்குத் தோற்றியது. ஆதலால் மணவாளன் அதற்குச் சம்மதித்து, "நல்லது, உங்கள் வழக்கப்படியே நான் செய்கிறேன்" என்ருன்.

மறுநாள் சூரியோதயத்துக்கு ஊரார் எல்லாரும் கூடி மணவாளனை அழைத்துக்கொண்டு குறித்த இடத்துக்குப் போவதாகத் தீர்மானமாயிற்று. மணவாளனுக்கு மனம் பூரித்தது. நாளை மாலைப் பொழுதுக்கெல்லாம், நாம் விஸ்தீரணமான நிலத்துக்குச் சொந்தக்காரனுகப் போகிருேம் என்று எண்ணி எண்ணி அவன் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. அந்த ஆனந்தத்தால், வண்டியில் மீதியாயிருந்த ஒரு கூடைப் பலகாரத்தையும் எடுத்துவந்து எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான்.

அங்கே கூடியிருந்த எல்லாரும் மணவாளனுடைய அன்பையும் உதாரத்தையும் மெச்சிக்கொண்டே அவன் கொடுத்த பலகாரங்களைத் தின்ருர்கள். சிலர், அந்த அருமையான தின்பண்டங்களைத் தங்கள் பெண்டுபிள்ளைகளும் தின்னவேண்டும் என்ற ஆசையால் கொஞ்சம் கொஞ்சம் மிகுத்து வைத்துக்கொண்டார்கள். பலகாரம்

தின்ற பிறகு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அப்பால் அவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

ஊர்த்தலைவன் மணவாளனைத் தன் வீட்டுக்கு விருந்தாக வந்து தங்கும்படி கேட்டுக்கொண்டான். மணவாளன் அதற்கு இசைந்து, அவனையும் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு அவன் வீட்டுக்கு விருந்தாய்ச் சென்றான். ஊர்த்தலைவன் வீட்டில் மணவாளனுக்கு நடந்த உபசாரத்துக்கு அளவில்லை. மணவாளன் மிகவும் சந்தோஷமாகவே அன்று பகற்பொழுதைக் கடத்தினான்.

## 7-வது அத்தியாயம்.

அன்றிரவு போஜனம் முடிந்ததும், ஊர்த்தலைவன் மணவாளனுக்கு நல்ல படுக்கை ஒன்று சித்தம் செய்து கொடுத்தான். மணவாளன் சிறிது நேரம் ஊர்த்தலைவனுடன் பேசிக்கொண்டிருந்து, பிறகு உறங்கப் போய்விட்டான். ஆனால், மறுநாள் தனக்குக் கிடைக்கப் போகிற நிலத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்ததால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

"விற்பனைக்கு உள்ள நிலம் முழுவதையும் சுற்றி வந்து விடுகிறேன். ஒரு நாழிகைக்குக் குறைந்தது இரண்டு மைல் நடக்கலாம். முப்பது நாழிகையில் அறுபது மைல் நடக்கலாம். அடையாளத்துக்குக் குழி தோண்டுவது முதலியவற்றால் தாமதப்படக்கூடிய நேரத்தைத் தள்ளிவிட்டாலும் இருபத்தைந்து நாழிகை தேறும். நாழிகைக்கு இரண்டு மைல் வீதம் இருபத்தைந்து நாழிகைக்கு ஐம்பது மைல் ஆயிற்று. ஐம்பது மைல் சுற்றளவு

வுள்ள நிலம் எவ்வளவு விஸ்தீரணமுள்ளதாய் இருக்கும்! அவ்வளவு நிலத்தை மேற்பார்ப்பதற்கு என்னால் முடியாது. எல்லைக்குட்பட்ட நிலத்தில் நல்ல பகுதியை என் சொந்த மேற் பார்வையில் வைத்துக்கொண்டு, மற்றப் பகுதியைக் குத்தகைக்கு விட்டுவிடுகிறேன். எனக்கு உரிமையான நிலத்திலேயே ஒரு வீடும் கட்டிக்கொள்ளலாம். இரண்டு எருதுகளும், இரண்டு பண்ணை யாட்களும் வைத்துக்கொண்டாற் போதும். ஒரு தொல்லையுமில்லாமல் சுகமாக ஜமீன்தாரர்போல் காலங்கழிக்கலாம்" என்று இவ்வாறெல்லாம் மணவாளன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

நெடுநேரம் வரையில் அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. பொழுது விடிவதற்குச் சிலநாழிகைகளுக்கு முன்னே தான் அவன் சிறிது கண்ணயர்ந்தான். அப்பொழுது, வெளியில் யாரோ சிரிப்பதுபோல் தோன்றியது. சிரிப்பது யார், ஏன் என்று அறிய அவனுக்கு ஆவல் உண்டானதுபோல் தோன்றியது. அவன் படுக்கையை விட்டு எழுந்து வெளியே சென்றான். என்ன அதிசயம்! அவ்வீட்டுக்கு உடையவனான ஊர்த் தலைவன்தான் வாயிற்படிக் கருகே உட்கார்ந்து வயிறு கிழியச் சிரித்துக் கொண்டிருந்தான்.

மணவாளன் அவனை நோக்கி, "ஏன் ஐயா சிரிக்கிறீர்?" என்று கேட்டான். ஆனால், அவன் வாய்மூடும் முன்னே சிரித்தவன் ஊர்த் தலைவன்தானா என்பது சந்தேகமாய் விட்டது. வேறு யாரோபோல் இருந்தது. மணவாளன் நன்றாய் உற்றுப் பார்த்தான். சிரித்தவன் ஊர்த் தலைவனுயில்லை; அங்கே நிலம் கிடைக்கும் என்று சொல்லிப்போன வியாபாரியா யிருந்தான். தெற்கே போன வியாபாரி இங்கே எப்படி வந்தான் என்று மண

வாளன் ஆச்சரியப்பட்டு அவனை நோக்கி, "ஐயா, நீர் எப்பொழுது இங்கு வந்தீர்?" என்று கேட்டான்.

மறுபடியும் பார்த்தால் சிரித்தவன் அந்த வியாபாரியா யில்லை. வேறு யாரோபோல் இருந்தது. மணவாளன் உற்றுப் பார்த்தான். தன் ஊரில் முதன் முதல் வந்து வடக்கே நிலம் சரசமாய்க் கிடைக்கும் என்று சொல்லிய வழிப்போக்கனை இருக்கக் கண்டான். மணவாளன் மிகவும் அதிசயப்பட்டு அவனையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தான். தன் கண்ணுக்குத் தெரிந்தவன் அந்த வழிப் போக்கனுகவும் இல்லை. மணவாளன் திகைப்புற்று வேறு யாராயிருக்கும் என்று யோசித்தான்; சிரித்தவன் முகத்தை உற்றுப் பார்த்தான். முகம் விளங்கவில்லை. ஏதோ ஓர் உருவம் சிரிப்பதாக மட்டும் தெரிந்ததே யொழிய வேறொன்றும் தெரியவில்லை. மணவாளன் இன்னும் கவனமாக உற்றுப் பார்த்தான். சிரித்துக்கொண் டிருந்த அந்த உருவத்தின் எதிரே யாரோ ஒருவன் படுத்திருப்பது போலத்தோன்றியது. அவன் உடை அலங்கோலமா யிருந்தது. இன்னும் கவனமாய்ப் பார்க்க, படுத்துக்கிடந்தவன் ஒரு பிணமாயிருக்கக் கண்டான் மணவாளன். அங்கே வந்து செத்துக்கிடக்கும் அவன் யார் என்று அறிய மணவாளன் அப்பிணத்தை நெருங்கிப் பார்த்தான்.

ஆ, என்ன அதிசயம்! பிணமாய்க் கிடந்த உருவம் தன் உருவமாகவே இருப்பதை மணவாளன் கண்டான். அவனுக்குத் திகில் உண்டாய்விட்டது. அவன் உடல் நடுங்கியது. அவன் மனமருண்டு கண் விழித்தான்.

அவன் கண்விழித்து எழுந்தான்.

"இதென்ன கனவு இது!" என்று அவன் தனக்குள்ளாக எண்ணிப் படுக்கை நீங்கிச்சென்று கதவைத்

திறந்து வெளியே எட்டிப்பார்த்தான். நிலம் தெளிந்திருந்தது. பொழுது விடியும் சமயமாயிற்று. "இப்பொழுதே புறப்பட்டால்தான் சூரியோதயத்துக்குக் குறித்த இடத்தில் இருக்கலாம்" என்றெண்ணி ஊர்த்தலைவனை எழுப்பினான். ஊர்த்தலைவன் எழுந்து அவன் விருப்பப்படியே குறித்த இடத்திற்குப் புறப்பட்டான். ஊராரும் எழுந்தனர். எல்லாருமாகத் திரண்டு குறித்த இடத்துக்குச் சென்றார்கள்.

4112

## 8-வது அத்தியாயம்.

மணவாளன் தன் வசமிருந்த பணத்தில் முந்நூறு வராகன் எடுத்துக்கொண்டு, தன் ஆளுடனும் ஊர்த்தலைவனுடனும் தன் வண்டியில் ஏறிச்சென்றான். சுற்றிவரும் நில எல்லையை அடையாளம் குறிப்பதற்காக ஊர்த்தலைவன் கொடுத்த ஒருசிறு கடப்பாரையையும் அவன் தன் கையில் வைத்திருந்தான்.

இவர்கள் போய்ச் சேரவேண்டியிருந்த இடம் ஊர்ப்புறத்தே மேட்டுப்பாங்கான ஒரு புன்செய் நிலம். அங்கே போய்ச்சேர்ந்ததும் இவர்கள் வண்டியைவிட்டு இறங்கினார்கள். இரண்டு மூன்று பெயர் இவர்களுக்கு முன்னேயே அங்கு வந்திருந்தார்கள். இவர்கள் வந்த பொழுதே வந்தவர்கள் சிலர். பின்னும் பலர் இவர்களுக்குப் பின்னால் வந்துகொண்டேயிருந்தார்கள். பொழுது விடிகிற சமயத்தில் அநேகமாய் அவ்வூரார் எல்லாரும் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

சூரியோதயமாயிற்று. மணவாளன் ஊர்த்தலைவனை நோக்கி "புறப்படலாமா?" என்றான்.

ஊர்த்தலைவன் தன் கையை நீட்டித் தனக்கெதிரே காணப்பட்ட நிலத்தை யெல்லாம் மணவாளனுக்குக் காட்டி, "ஐயா, இதோ உமது கண்ணுக்கெட்டிய தூரம் உள்ள நிலமெல்லாம் எங்களுடையதுதான். இதில் உமக்கு இஷ்டமானதை எடுத்துக்கொள்ளும்" என்றான்.

அவன் சுட்டிக்காட்டிய நிலப்பரப்பை மணவாளன் கூர்ந்து பார்த்தான். அவன் கண்கள் கூசின. கண்ணுக் கெட்டிய தூரம் நிலம் சமமாயும் பசுமையாயும் இருந்தது.

ஊர்த்தலைவன் மணவாளன் கையிலிருந்த கடப் பாரையை வாங்கி, அங்கே ஒருசிறு குழி தோண்டி, அதன் வாயைச் சுற்றித் தோண்டிய மண்ணை அணைகட்டி விட்டுக் கடப்பாரையை மணவாளனிடம் கொடுத்து, "இதே விதமாகக் கொஞ்ச தூரத்துக் கொருதரம் ஒருசிறு குழி தோண்டி வைத்துப்போனாற் போதும். நீர் திரும்பி வந்து சேரவேண்டிய இடத்திற்கு அடையாளமாக இந்தக் குழி இருக்கிறது. இதோ சூரியன் தோன்றிவிட்டது. நீர், தாமதியாமல் முந்நூறு வராகனையும் எண்ணி வைத்து விட்டுப் புறப்படும்" என்றான்.

மணவாளன் தான் கொண்டு வந்திருந்த முந்நூறு வராகனையும் ஊர்த்தலைவனிடம் கொடுத்தான். உடனே துவிபாஷி இரண்டு ரொட்டிகளையும், ஒரு சுரைக் குடுவை தண்ணீரையும் மணவாளனிடம் கொடுத்து, இதைக் கை யில் வைத்துக்கொள்ளும். பசி தாகம் எடுத்தால் அப் பொழுது வழியில் உமக்கு நீரேனும் உணவேனும் அகப் படாது" என்றான். மணவாளன் அதை வந்தனத்தோடு வாங்கிக்கொண்டு ஊர்த்தலைவனை நோக்கி, "புறப்பட லாமா?" என்றான்.

புறப்படலாம். உடன் படிக்கை ஞாபகமிருக்கட் டும். இதோ இப்பொழுதுதான் சூரியன் கீழ்த்திசையில்

தோன்றுகிறது. இது மேற்றிசையில் மறைவதற்குள் நீர் இந்த இடத்திற்குத் திரும்பி வந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் நிலம் உம்முடையதாகும். அப்படி வரத் தவறினால் நிலம் உம்முடையதாகாது. கொடுத்த பணத்தையும் நீர் இழந்து விடவேண்டும். இது ஞாபகமிருக்கட்டும்." என்றான் ஊர்த்தலைவன்.

"நல்லது" என்று மணவாளன் புறப்பட்டான். சிறிது தூரம் வரையில் அவன் மிகவும் மெதுவாகவே சென்றான். சுமார் ஒருமைல் தூரம் போனதும் அவன் சற்று நின்றான்; அடையாளத்துக்கு ஒரு சிறு குழி தோண்டினான்; அங்கிருந்து திரும்பிப் பார்த்தான். ஊரார் கூட்டமாய் நிற்பதுமட்டும் தெரிந்தது. அவர்கள் உருவம் விளக்கமாய்த் தெரியவில்லை. மணவாளன் அவர்களைப் பற்றிக் கவனியாமல் முன் நடந்தான். அரை மைல் அல்லது ஒரு மைலுக்கு ஒருதரம் அவன் அடையாளக் குழி ஒவ்வொன்று தோண்டி வைத்துச் சென்றான்.

போகப்போக வெயில் அதிகமாயிற்று. மணவாளன் தான் புறப்பட்ட இடத்தை மறுபடியும் திரும்பிப் பார்த்தான். ஊரார் நிற்பது ஒருவாறு ஸ்தூலமாக விளங்கியதேயொழிய நன்றாய் விளங்கவில்லை. தான் வந்துள்ள தூரம் சற்றேறக் குறைய ஐந்துமைல் இருக்குமென்று அவனுக்குத் தோன்றியது. அதற்குள்ளாகவே அவன் உடம்பு வியர்த்தது. அவன் தன் சட்டையை அவிழ்த்து விட்டு நடந்தான். வானத்தை அண்ணாந்து பார்த்தான். சூரியன் அப்பொழுதுதான் நன்றாய் மேலெழுந்திருந்தது. காலை எட்டு மணி இருக்கும். பலகாரம் சாப்பிடுகிற வேளை. தன் கையில் உள்ள ரொட்டிகளில் ஒன்றைச் சாப்பிடலாமா என்று நினைத்தான் மணவாளன். அவனுக்குப் பசி அவ்வளவாக இல்லை. வெயிலின் உஷ்ணந்தான்

கொஞ்சம் களைப்பு உண்டாக்கியது. "ரொட்டியை இப்பொழுது சாப்பிட்டுவிட்டால் மத்தியானம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். உச்சிப் பொழுதாகிற வரையில் ஆகாரம் உட்கொள்வது அனுவசியம். ஆனால் இப்பொழுது தானே சூரியன் மேலெழுந்திருக்கிறது. இதற்குள் கிட்டத்தட்ட ஆறு மைல் வந்துவிட்டோம். சற்று இளைப்பாறிச் செல்வோம்" என்று கருதி அவன் அங்கே பசும் புற்றரையில் உட்கார்ந்தான். சுமார் பத்து நிமிஷ நேரம் தான் சுற்றவேண்டிய நிலப்பகுதியை மனத்தால் அளவிட்டுப் பார்த்தான். இன்னும் ஓர் ஆறு மைல் போய்த் திரும்பலாம் என்று தோன்றியது. பன்னிரண்டு மைல் அகல நீளமுள்ள சதுர நிலத்தைச் சுற்றி வந்து விடலாம் என்பது அவன் எண்ணம். பக்கத்துக்குப் பன்னிரண்டாக, நான்கு பக்கத்திற்கும் நாற்பத்தெட்டு மைல் நடந்தாக வேண்டும். இது வரையில் நடந்த தூரம் ஆறு மைல் தானே, இன்னும் 42 மைல் இருக்கிறது. மணிக்கு நான்கு மைலாவது நடந்தால்தான் சூரியாஸ்தமனத்துக்குள் குறித்த இடத்தைச் சுற்றி வரலாம் என்பது தெளிவாய்த் தோன்றியது. உடனே அவன் களைப்பாறியது போதும் என்று முன்னையினும் வேகமாக நடந்தான். அடையாளக் குழி தோண்டுவதற்காக அன்றி வேறெதற்கும் இடை வழியில் நிற்காமல் அவன் விரைந்து நடந்தான்.

புறப்பட்ட இடத்திலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் வந்திருக்கலாம் என்று தோன்றியதும் அவன் வலது கைப்புறமாய்த் திரும்பி நடந்தான். அப்பொழுதெல்லாம் வெயில் நன்றாய்க் காய்கிற நேரம். மணவாளன் இன்று ஒருநாள் உடம்பு வருந்துவதைப் பாராட்டக்கூடாதென்று தன்னால் எவ்வளவு வேகமாக நடக்கக்கூடுமோ அவ்வளவு வேகமாக நடந்தான். அவன் உடம்பினின்று வியர்வை

ஆறுய் ஒழுகியது. அவன் அதை லட்சியம் செய்யாமல் நடந்தான். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டது. வெயில் நெருப்பாய்க் காய்ந்தது. மணவாளன் கண்ணுக்கெட்டிய தூரம் எங்கும் நிலமாகக் காணப்பட்டதே யொழிய மனிதர்கள் தென்படவில்லை. ஒரு பக்கம் கடந்து அளந்தாய் விட்டது. இரண்டாவது பக்கமும் கடந்து அளந்துவிட்டு மூன்றுவது பக்கத்திற்குத் திரும்புவதன்முன் உணவு கொள்வதில்லை; இளைப்பாறுவது மில்லை என்று தீர்மானித்து நடந்தான் மணவாளன்.

மூன்றுவது பக்கம் திரும்பும்பொழுது மணி இரண்டாய்விட்டது. அதுவரையில் அவன் பசியையும் களைப்பையும் பொறுத்திருந்ததே அருமை. நல்ல வெயிலில் இருபத்துநாலு மைல் நடந்தால் எப்படி யிருக்கும்? கிழக்கு எல்லை வகுத்து, தெற்கு எல்லை வகுத்து, மேற்கு எல்லைக்கு வரவும் அவன் சோர்ந்து விழுந்துவிட்டான். பிறகு ஒருவாறு சோர்வு நீங்கித் தன் கைவசம் இருந்த ரொட்டிகளைத் தின்று, சுரைக் குடுவையிலிருந்த நீரையும் அருந்தினுன். உடனே அவனுக்கிருந்த களை நீங்கிச் சிறிது உற்சாக முண்டாயிற்று. எழுந்து நடந்தான். முன்போல அவ்வளவு வேகமாய் நடக்க முடியவில்லை. மணிக்கு ஒரு மைல் நடப்பதே கஷ்டமாயிற்று. மேற்றிசையில் ஐந்து மைல் செல்வதற்குள் சூரியன் மேற்றிசையில் சாய்ந்துவிட்டது. இன்னும் ஒருமணி நேரத்தில் மறைந்துவிடும்போல் தோற்றியது. மணவாளனுக்குத் திகில் உண்டாய்விட்டது. "நாம் எண்ணியபடி பன்னிரண்டு மைல் போய்த் திரும்புவதென்றல் பொழுதுபோய்விடும். இப்படியே குறுக்கே நடந்து புறப்பட்ட இடத்துக்குப் போய்ச் சேருவோம்" என்று கருதி அவன் கீழ்த்திசை நாடித் திரும்பினுன்.

---

# 9-வது அத்தியாயம்

கிழக்கு எல்லையில் பன்னிரண்டு மைல் சென்றது போல மேற்கு எல்லையிற் செல்ல முடியாமற் போயிற்றே என்று மணவாளன் வருந்தினான். மேற் கெல்லையில் ஆறு மைல் சென்றதும் அவன் தென்கிழக் காகக் குறுக்கே நடந்து புறப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேரவேண்டியவனானான். அப்படியாவது குறித்த நேரத் தில் குறித்த இடம் போய்ச்சேர முடியுமா என்பதே சந் தேகமா யிருந்தது. சூரியன் அஸ்தமிப்பதற்குள் ஊரார் கூடி நிற்கும் இடத்திற்குப் போய்ச் சேராவிட்டால்—என்னாகும்! நிலம் கிடைக்காது. எவ்வளவோ வருத்தத் துடன் இதுவரையில் முப்பது மைல் தூரம் நடந்தது வியர்த்தமாகும்! அம்மட்டுமா? நிலத்துக்கு விலையாக ஊர்த் தலைவனிடம் கட்டிய முந்நூறு வராகனும் நஷ்ட மாய்விடும்! அதை நினைக்கவும் மணவாளன் நெஞ்சம் திகி லடைந்தது. தன்னாற் கூடியமட்டும் வேகமாகக் குறுக்கே விழுந்து ஓடினான்.

ஒரு மைல் ஓடவும் அவனுக்குக் கால் ஓய்ந்துபோயி ற்று. சற்று உட்கார்ந்து இளைப்பாறினால் நல்லதென்று தோன்றியது. ஆனால் அவ்விதம் செய்ய நேரமில்லை. சூரி யன் விரைவாக மேற்றிசையில் இறங்கிக்கொண்டே சென் றது. இன்னும் இரண்டு நாழிகையில் கண்ணுக்கு மறை ந்துவிடும்போ லிருந்தது. கடக்கவேண்டிய தூரமோ பத்து மைலுக்குமேல் இருந்தது. பாவம்! மணவாளன் எப்படி ஒரு நிமிஷ நேரமேனும் இடைவழியில் தாமதிக் கக் கூடும்! இப்பொழுது ஒரு நிமிஷம் அவனுக்கு ஒரு

மைல் போன்றதாம் அன்ருே ! ஆதலின் அவன் கணமும் தாமதியாது ஓடினன்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு வெகுதூரம் ஓடியும் புறப்பட்ட இடத்தை இன்னும் நெருங்கிய பாடில்லை. வெயில் நன்ருய் இறங்கிவிட்டது. இன்னும் ஒரு கால்மணி நேரத்தில் சூரியன் அடியோடு மறைந்துவிடும்போ லிருந்தது. மணவாளன் தான் புறப்பட்ட இடம் தெரிகிறதா என்று கூர்ந்து பார்த்தான். நிலம் ஒரே சமவெளியாயிருந்ததால் புறப்பட்ட இடம் வெகு தூரத்தில் இருந்த போதிலும் ஒருவாறு கண்ணுக்குத் தெரிந்தது. அங்கு நின்ற ஊரார் கூட்டம் சிறு பூச்சிகளின் கூட்டம்போல் அவ்வளவு சிறிதாய்த் தோன்றியது. மணவாளன் வரும் இடத்திற்கும் அவர்கள் நிற்கும் இடத்திற்கும் இடையே குறைந்தது ஐந்து மைல் இருக்குமென்று தோன்றியது. 'இன்னும் அரை நாழிகையில் சூரியன் மறைந்துவிடும். அதற்குள் இந்த ஐந்து மைல் தூரத்தையும் கடந்தாக வேண்டுமே !' என்று மணவாளன் ஏங்கினன். " ஐயோ, பேராசைபட்டுப் பெருநஷ்டம் அடைந்தேனே!" என்று புலம்பினன். பிறகு ' இருக்கட்டும். முயற்சியைத் தளரவிடாமல், நாலு காற்பாய்ச்சலில் ஓடுவோம். இருட்டுவதற்குமுன் குறித்தவிடம் போய்ச் சேர்ந்துவிடலாம் ' என்று அவன் தன்னைத்தானே தைரியம் செய்துகொண்டு, தன் கையிலிருந்த கடப்பாரை, சுரைக்குடுவை இவைகளை விட்டெறிந்துவிட்டுக் கால் நிலத்திற் பாவாமல் அவ்வளவு வேகமாக ஓடினன்.

அவன் உடம்பு முழுவதும் வியர்வை பெருகி ஆருய் ஓடியது. வியர்வை நீரில் அவன் உடையெல்லாம் நனைந்து உடலோடு ஒட்டிக்கொண்டன. அவன் நா உலர்ந்து போயிற்று. அவன் சுவாசம் உலைத்துருத்தியி லிருந்து

வருவதுபோல் இருந்தது. அவன் மார்பு சம்மட்டியால் அடிபடுவது போல் தோன்றியது. கால்கள் இரண்டும் முறிந்து விழுந்து விடும்போற் காணப்பட்டன.

மணவாளனுக்குப் பொறுக்க முடியவில்லை. "இந்த வருத்தம் தாளாமல் இறந்து விடுவேனே?" என்று அஞ்சினன். ஆயினும், ஓடுவதை நிறுத்திச் சற்றுக் களைப்பாற அவன் மனம் இசையவில்லை. 'இது வரையில் ஓடி வந்தேன். இப்பொழுது நின்றுவிட்டால் என்னைப் பைத்தியக்காரன் என்பார்கள்' என்று கருதி அவன் சற்றும் நில்லாமல் ஓடினன்—தலை தெறிக்க ஓடினன்.

சூரியன் முக்கால் பாகம் மறைந்துவிட்டது. மற்றக் கால் பாகமும் இன்னும் பத்து நிமிஷத்தில் மறைந்து விடும். மணவாளன் ஓடிவந்த வேகத்தில் கிட்டத்தட்டக் குறித்த இடத்தை நெருங்கி விட்டான். அப்படியும் இன்னும் ஒருமைல் தூரம் கடக்க வேண்டியிருந்தது. ஊர்த் தலைவன் ஊரார் முதலியவர்கள் நிற்பது இப்பொழுது அவனுக்கு முன்னையைவிடத் தெளிவாய்த் தெரிந்தது. அவர்கள் கைதட்டிச் சத்தமிட்டு அவனைக் கூப்பிடும் சத்தமும் அவன் காதுக்கு எட்டியது.

மணவாளன் தன் முழு பலத்தையும் கொண்டு பொறி கலங்க ஓடினன். அநேகமாய்க் குறித்த இடத்தை நெருங்கி விட்டான். இன்னும் ஒரு கூப்பிடுதூரம் சென்றாற் போதும். அவன் பின்புறம் திரும்பிப் பார்த்தான். சூரியன் அடியோடு மறைந்துவிட்டதைக் கண்டான். அவன் நெஞ்சம் பிளப்பதுபோல் இருந்தது. 'பட்ட வருத்தமெல்லாம் பலனற்றதாயிற்றே!' என்று ஏங்கினன்.

ஊரார் 'வாரும், வாரும்' என்று கூச்சலிட்டு அவனை அழைத்தார்கள். மணவாளன் ஒன்றும் தோன்றாமல் ஓடினன். கூட்டத்தை நெருங்கவும், எல்லாருக்கும் முன்

னாக ஊர்த் தலைவன் உட்கார்ந்து விலாப்புடைக்கச் சிரித்துக்கொண் டிருப்பதை அவன் கண்டான். உடனே, அன்று அதிகாலையிற் கண்ட கனவு அவன் ஞாபகத்துக்கு வந்தது. 'ஐயோ!' என்று அவன் அலறினான். அவன் கால்கள் உயிரற்றாற்போல மறுத்தன. அவன் கைகளை விரித்துக்கொண்டு ஊர்த் தலைவன் முன்னே விழுந்தான்.

ஊர்த் தலைவன் அவனை நோக்கி, "ஐயா, நீர் அதிக சமர்த்தர்! எவ்வளவு விஸ்தீரணமான நிலத்தைச் சுற்றி வந்துவிட்டீர்!" என்றான்.

மணவாளனுக்குத் துணையாக உடன்வந்த ஆள் தன் எஜமானனை ஆதரிக்கக் கருதி, கீழே விழுந்த அவனைத் தூக்க ஓடினான். மணவாளன் வாயிலும் மூக்கிலும் இரத்தம் பெருகியது. எல்லோரும் வருத்தப்பட்டுக் கிட்ட வந்து அவனைத் தொட்டுப் பார்த்தார்கள். அவன் இறந்து போய் விட்டான். மணவாளனுக்குத் துணையாய் வந்தவன் அங்கேயே ஒரு குழிதோண்டி அவனைப் புதைத்து விட்டு மற்றவர்களுடன் அவ்விடம் விட்டுப் போய் விட்டான்.

பாவம், மணவாளன் தெய்வத்தை மறந்திருந்ததால், பேராசைப் பேய் அவனைப் பிடித்து அவன் உயிரை வாங்கிவிட்டது. அவன் உயிர்பெற்று எழுந்தால் நமக்கு என்ன சொல்வான்? 'தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்' என்றுதான் சொல்வான்.

---

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.

# மனமோகினி

**ஓர் மாதாந்த சஞ்சிகை.**

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள் அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புஸ்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922வரு பிப்ரவரி மீ 1உ வெளியாயாய்விட்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

முன் பணம் அனுப்பினால் 2-8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.